பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ. எம்.பி.

மலர்: 15] சென்னை: மாசி 16 (28—2—68) புதன் ★ வெளியூர்: மாசி 17 (29—2—68) வியாழன் [இதழ்: 214

கூர்ந்து கவனியுங்கள்-கூறுவது நாமல்ல-ராஜ்நாராயண்!

"தங்களையும் கட்சியினையும் மீண்டும் பதவியில் அமர்த்திக் கொள்வதற்காகக் காமராசரும் சுப்பிரமணியமும் சேர்ந்து கொண்டு, மாணவர்களைப் பிரிவினைக் கோரிக்கைக்குத் தூண்டிவிட்டுப் போராடச் சொல்லியிருக்கிறார்கள்!"

—மக்களவையில், 27—2—68 அன்று சம்யுக்த சோஷலிஸ்டுக் கட்சி உறுப்பினர் ராஜ்நாராயண் பேசியது.

தமிழக அரசு வரவு-செலவுத் திட்டம்

வரவு ரூ. 248.28 கோடி; செலவு ரூ. 247.54 கோடி; உபரி ரூ. 74 இலட்சம்

நகர ஈட்டுப் படி விரிவு—தனியார் பள்ளியாசிரியரும் பயன் பெறுவர்

'பரிசுச் சீட்டு' மூலம் பணம் திரட்ட அரசு முடிவு

சென்னை, பிப். 28—

தமிழக அரசின் 1968—69-ம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் இன்று வெளியிடப்பட்டது.

இன்று காலை 10-30 மணிக்குக் கூடிய சட்டமன்றக் கூட்டத்தில் கேள்வி நேரம் முடிந்ததும், முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள், வரவு-செலவுத் திட்டத்தை வெளியிட்டு உரை நிகழ்த்தினார்கள்.

வரவு ரூ. 248.28 கோடியாகவும், செலவு ரூ. 247.54 கோடியாகவும் உபரி ரூ. 74 இலட்சமாகவும் இவ்வாண்டு வரவு-செலவுத் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

சென்னை மாநகர எல்லைக்குள் உள்ள அரசு உதவி பெறும் பள்ளிகளின் ஆசிரியர்கட்கும் நகர ஈட்டுப் படி வழங்க அரசு முடிவு செய்துள்ளது.

சென்னை மாநகரைச் சுற்றியுள்ள புறநகர்களில் உள்ள அரசு ஊழியர்கட்கும் நகர ஈட்டுப் படி வழங்கவும், இப்பகுதிகளில் உள்ள அரசு உதவி பெறும் பள்ளி ஆசிரியர்கள், உள்ளாட்சி மன்ற ஊழியர்கள் ஆகியோருக்கும் இத்திட்டத்தை விரிவுபடுத்தவும் முடிவு செய்திருப்பதுடன், மதுரை நகர எல்லைக்குள்ளிருக்கும் ரூ. 500-க்குக் குறைந்த ஊதியம் பெறும் எல்லாப் பணியாளர்களுக்கும் 5 சதவிகித அடிப்படையில் ரூ. 5-க்குக் குறையாமல் ரூ. 10-க்கு மேற்படாமல் நகர ஈட்டுப் படி வழங்கவும் முடிவு செய்திருக்கிறது. இத்திட்டத்தால் அந்நகரில் உள்ள பள்ளியாசிரியர்களும், உள்ளாட்சி மன்ற ஊழியர்களும் பயனடைய வழி செய்யப்பட்டிருக்கிறது.

மாநில வளர்ச்சிக்கு ஏழை எளிய மக்களும் தொகை வழங்கும் வகையில், 'பரிசுச் சீட்டு'கள் நடத்துவதற்கான திட்டமொன்றையும் வகுத்து அடுத்த நிதியாண்டுத் தொடக்கத்தில் நிறைவேற்ற அரசு முன்வந்துள்ளது.

உபரித் தொகை—அண்ணா விளக்கம்

1968-69-ம் ஆண்டின் வரவு-செலவுத் திட்டத்தில், வண்டிகள் வரி, விற்பனை வரி, மின்சார வரிகள் போன்ற நீட்சித் திறனுள்ள வருவாய் வழிகள் அனைத்தின் கீழும் இயல்பான வளர்ச்சிக்கு வகை செய்த பின்னர், நடைமுறைக் கணக்கில் நமது வரவினம் ரூ. 248 28 கோடி என்றும், செலவினம் ரூ. 247.54 கோடி என்றும், இதனால் ரூ. 74 இலட்சம் உபரி ஏற்படும் என்றும் மதிப்பிடப்படுகின்றது.

உணவுத் தானிய விற்பனையின் மீது உதவித் தொகை வழங்கும் திட்டம் இப்போது செயல்பட்டு வருகின்ற பகுதிகளில், அந்த உதவித் தொகைக்காக, 7 கோடியே 24 இலட்சம் ரூபாய்க்கு வகை செய்த பின்னரும், இந்த உபரி கிட்டியுள்ளது.

நகர ஈட்டுப் படி வழங்கும் திட்டத்தை, சென்னை மாநகரைச் சுற்றியுள்ள பகுதிகளுக்கும், மானியம் பெறும் பள்ளி ஆசிரியர்களுக்கும், மதுரை நகரத்திற்கும் இப்போது விரிவுபடுத்தியுள்ளதால், ரூ. 40 இலட்சம் கூடுதல் செலவினத்தையும், முன்பே நகர ஈட்டுப் படியின்கீழ் அளிக்கப்பட்டுள்ள ரூ. 75 இலட்சம் கூடுதல் செலவினத்தையும், கடந்த நவம்பர் திங்களில் ஒட்பளிப்பு வழங்கப்பட்ட அகவிலைப் படி வீதங்களில் ஏற்பட்ட உயர்வினையும் இந்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகள் முற்றிலும் எதிரொலிக்கின்றன.

அறிஞர் அண்ணா களைப்புற்றார்!

★

சென்னை, பிப். 28—

உடல்நிலை சரியில்லாதிருந்தும் அண்ணா அவர்கள், ஐம்பத்தெட்டுப் பக்கங்களில் அச்சிடப்பட்டிருந்த (தமிழ்) நிதிநிலை அறிக்கையை சட்டமன்றத்தில் படிக்கத் தொடங்கினார்கள்.

சில பக்கங்களுக்கு மேல் படிக்க முடியாமல் களைப்பு ஏற்பட்டது; சமாளித்துக்கொண்டு தொடர்ந்து படிக்க முனைந்த நேரத்தில், எதிர்க் கட்சியினர் தெரிவித்த கருத்துக்கிணங்க—அவையின் இசைவுடன்—நிதிநிலை அறிக்கையை அமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியனிடம் படிக்கும்படி கொடுத்தார்; திரு. நெடுஞ்செழியன் படித்து முடித்தார்.

அகவிலைப் படி உயர்வின் விளைவாக ஏற்படுகிற செலவினம் ரூ. 9.2 கோடி ஆகும்; அதில் ரூ. 2 3 கோடி, பணியாளர்களின் வருங்கால வைப்பு நிதிக் கணக்கில் வரவு வைக்கப்பட வேண்டும்.

நகர ஈட்டுப் படி விரிவு விவரம்

ரூ. 500 வரையில் சம்பளம் பெறுகிற மாநில அரசுப் பணியாளர்களுக்கு, இந்திய அரசுப் பணியாளர்களுக்குப் பொருந்தும் அதே வீதங்களில், நகரஈட்டுப் படி வழங்க அனுமதி அளித்திருக்கிறோம்.

சென்னை மாநகர எல்லைகளுக்குள் இருக்கிற மானிய உதவி பெறும் பள்ளிகளின் ஆசிரியர்களுக்கும் நகர ஈட்டுப் படியை அதே வீதங்களில்—அதே நிபந்தனைகளுக்குட்பட்டு வழங்குவதற்கும் இப்போது அரசு முடிவு செய்துள்ளது

பணியாளர்களிடம் இருந்து பெறப்பட்ட சில முறையீடுகளைக் கருத்திற்கொண்டு அரசு இப்போது, சென்னை மாநகர எல்லைகளை அடுத்து ஏற்கனவே சென்னை மாநகருக்குப் பொருந்தும் வீதங்களில் வீட்டு வாடகைப் படி வாங்கிவரும் பகுதிகளிலிருக்கும் பணியாளர்களுக்கும், நகர ஈட்டுப் படி அதே வீதங்களிலும்—அதே சம்பள வரையறைகளுக்குட்பட்டு வழங்க முடிவு செய்துள்ளது.

இம்முடிவிற்கிணங்க, நகர ஈட்டுப் படி, பறங்கிமலை–பல்லாவரம்–குரோம்பேட்டை–தாம்பரம்–அம்பத்தூர்–வில்லிவாக்கம்–ஆவடி–மாதவரம் போன்ற இடங்களுக்கும் விரிவுபடுத்தப்படும்.

இப்பகுதிகளிலுள்ள மானியம் பெறும் பள்ளிகளின் ஆசிரியர்களும், ஊராட்சி மன்றங்களின் பணியாளர்களும், அரசு எடுத்துள்ள இம்முடிவின் பயனைப் பெறுவர்.

மதுரை நகரை, நகர ஈட்டுப் படி பெறுவதற்கு உரிமையுள்ள B-2 வகுப்பு நகரமாக இந்திய அரசு வகைப்படுத்தியுள்ளது; இதற்கிணங்க, மதுரை நகர எல்லைக்குள் உள்ள அலுவலகங்களில், ரூ. 500-க்குக் குறைந்து சம்பளம் வாங்குகிற அனைத்துப் பணியாளர்களுக்கும், அவர்களுடைய சம்பளத்தில் 5 சதவீத அளவில் ரூ. 5-க்குக் குறையாது ரூ 10-க்கு மேற்படாமல் நகர ஈட்டுப் படி வழங்க இப்போது அரசு முடிவுசெய்துள்ளது,

மதுரை நகர எல்லைகளுக்குள் பணியாற்றுகின்ற ஊராட்சி மன்றங்களின் பணியாளர்களும், மானிய உதவி பெறும் பள்ளிகளின் ஆசிரியர்களும் அதே வீதங்களில், நகர ஈட்டுப் படியின் நலன்களைப் பெறுவர். 1968 ஏப்ரல் 1-ம் நாளில் சேர வேண்டிய மார்ச் திங்கள் சம்பளத்திலிருந்து செயல்படவிருக்கின்ற இந்தச் சலுகைகளின் காரணமாக, வருகின்ற ஆண்டில் ஏறக்குறைய ரூ. 40 இலட்சம் அளவுக்குப் பொறுப்புகள் கூடும்; இதற்கேற்ப, 1968—69-ம் ஆண்டிற்குரிய வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் நிதி வகை செய்யப்பட்டுள்ளது.

'அசோகா'வில் பாதி வெறுமை!

அரசினர் விடுதியிலும் தங்குவாரில்லை!

புதுடில்லி ஐ. நா. மாநாட்டுக்கு வீண் செலவு!

இந்தியத் தலைநகரில் நடைபெறும் உலகப் பொருளாதார—வியாபார மாநாட்டினையொட்டி வருகை தருகின்ற வெளிநாட்டு விருந்தினர் தங்குவதற்கென ரூ 2.4 கோடி செலவில் கட்டப்பட்ட அரசாங்க நிறுவனமான அசோகா ஓட்டலின் தனிக் கட்டடம், தங்குவதற்கு ஆளின்றிப் பாதிக்குமேல் வெறுமையாகக் கிடக்கிறது.

250 அறைகளைக்கொண்ட அந்தத் தனித் கட்டடத்தில், பாதிப் பகுதியில்கூட விருந்தினர்கள் தங்கவில்லை!

மாநாட்டையொட்டி அரசினர் கட்டிய மற்றொரு விடுதி, முழுமையும் தங்குவதற்கு ஆளின்றி இருக்கிறது! அந்த இடங்கள், அரசு ஊழியர்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்றன!

சட்டமன்றத்தில்....!

★

'போகாத நிருபர்' என்ற பெயரில் தோழர் எஸ் ஆர். தரும் சட்டமன்ற நிகழ்ச்சிகள் பற்றிய நடப்பு விமர்சனம், நாளை இதழ் முதல் தொடர்ந்து இடம் பெறும்.

—ஆசிரியர்

காங்கிரசு ஆட்சியினர் நடத்தும் போட்டியின் லட்சணம்

காங்கிரசுக்காரர்கள் ஆட்சி நடத்தும் கருநாடக மாநிலத்தில், அரசாங்கம் அளிக்கும் பரிசு படும்பாடு குறித்து ஜே. ஆர். இலட்சமண ராவ் என்ற கன்னட எழுத்தாளர் தமது அனுபவத்தைக் கூறியிருக்கிறார்.

இந்த எழுத்தாளர், சில ஆண்டுகளுக்கு முன்பு, 'விஞ்ஞானி கலிலியோவின் வாழ்க்கை' என்றொரு நூலை எழுதி அதன் கையெழுத்துப் படியைத் தம்மிடம் வைத்திருந்தார்.

1966-ல், குழந்தை இலக்கியம் படைக்கும் எழுத்தாளர்களுக்காகக் கருநாடக அரசு நடத்திய போட்டிக்கு அவர் அந்த நூலை அனுப்பிவைத்தார்.

அவருடைய நூலுக்குப் பரிசளிப்பதென அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக 1966 பிப்ரவரியில் வானொலியிலும், பத்திரிகைகளிலும் அறிவிக்கப்பட்டது; ஆனாலும், நேரடியாக அவருக்கு எந்தவிதமான தகவலும் தெரிவிக்கப்படவில்லை.

அந்த எழுத்தாளர் மாநிலக் கல்வித் துறை இயக்குநரோடு தொடர்பு ஏற்படுத்திக் கொள்ள முயன்றார்; ஆனாலும் அவருக்குச் சரியான பதில் கிடைக்கவில்லை!

சென்ற ஆண்டு டிசம்பரில், அவர் உயர்தர அரசாங்க அதிகாரி ஒருவருக்கு இதைப்பற்றிக் கடிதம் எழுதினார்.

தொடர்புடைய துறைச் செயலாளருக்குத் தாம் இதுபற்றி மூன்று கடிதங்கள் எழுதிவிட்டதாகவும், இருந்தும் இதுவரையில் தமக்குப் பதில் கிடைக்கவில்லை என்றும் அவர் கையை விரித்துவிட்டார்!

பரிசு பெறுவது இருக்கட்டும்; போட்டிக்கு நூலை அனுப்பிவிட்டதால், போட்டி விதிகளின்படி, அதனைச் சொந்தமாகவும் வெளியிட முடியாமல் தத்தளித்துக்கொண்டிருக்கிறார்—இந்தக் கன்னட எழுத்தாளர்!

நம்நாடு
ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ. எம்.பி.

திருவள்ளுவராண்டு 1999 மாசி 16 (28—2—68) புதன்

பொருத்தமற்ற சமாதானம்!

'டால்மியாபுரம்' என்ற புகைவண்டி நிலையம் அமைந்துள்ள ஊர், ஏற்கனவே 'கல்லக்குடி' என்ற பெயரால் வழங்கப்பட்டு வந்தது. 'அப்பெயரையே மீண்டும் அங்குள்ள புகைவண்டி நிலையத்துக்கும் இடவேண்டும்' என்பது அங்குள்ள மக்களின் விருப்பம்.

அப்பகுதி, 'பழங்காநத்தம்' ஊராட்சி எல்லைக்குள் இருக்கிறது. எனவே அவ்வூராட்சி மன்றம், 'டால்மியாபுரம்' எனப் பெயரிடப் பட்டதை எதிர்த்தும், 'கல்லக்குடி எனப் பெயரிட வேண்டும்' எனக் கோரியும் ஏறத்தாழ பதினறு ஆண்டுகளுக்கு முன்பே தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறது.

இத்தகு பின்னணிப் பலத்துடன், 'டால்மியாபுரம்' என்ற பெயரை மாற்றி, 'கல்லக்குடி' எனப் பெயரிட வேண்டும் என்பதற்காகத் திராவிட முன்னேற்றக் கழகம் அறப்போரை மேற்கொண்டது; இந்தப் பெயர் மாற்ற அறப்போரை, இன்று பொதுப்பணித் துறை அமைச்சராக இருந்துவருகின்ற கருணநிதி அவர்கள் தலைமையேற்று நடத்தினர். தம் உயிரையும் துரும்பாக மதித்து அவர், அவ்வறப்போரில் பங்கு கொண்டார்; அதற்காக ஆறு திங்கள் கடுங்காவல் தண்டனையும் பெற்று, திருச்சி மாவட்டச் சிறையில் மூடப்பட்டிருந்தார்.

அந்தப் பெயர் மாற்றம் கோரிப் பல கழகத் தோழர்கள், அறப்போரில் ஈடுபட்டனர்; அவர்கள் அனைவரும் சிறையில் தள்ளப் பட்டனர்.

இந்தப் பெயர் மாற்ற அறப்போரின் எதிரொலியாக, 'டால்மியாபுரம்' என்ற பெயருக்குப் பதிலாக, 'கல்லக்குடி' என்ற பெயரைப் புகைவண்டி நிலையத்துக்கு வைப்பது குறித்து இரயில்வேத் துறை தீவிரமாக ஆராய்ந்தது. 'அப்பகுதி மக்களின் விருப்பத்துக்கு மதிப்பளிப்பது' என்ற கருத்தில், புகைவண்டி நிலையத்துக்கு, 'கல்லக்குடி எனப் பெயரிட புகைவண்டித்துறை தீர்மானித்துவிட்டது' என்றுகூட அப்பொழுது, தமிழக ஆங்கிலத் தினசரி ஒன்றில் செய்தி தரப்பட்டிருந்தது.

ஆனல், அப்பொழுது இரயில்வேத் துணை அமைச்சராக இருந்துவந்த--தமிழகத்தைச் சேர்ந்த 'கனவான்' அந்த அமைச்சுத் துறையின் முடிவுக்கு முட்டுக்கட்டை போட்டதாகக் கூறப்பட்டது. அந்த முட்டுக்கட்டையின் விளைவாக, 'கல்லக்குடி' எனப் பெயர் மாற்றும் தன்னுடைய முடிவை மேற்படி அமைச்சுத்துறை கைவிட்டுவிட்டது.

இருந்தாலும், 'பெயரை மாற்றவேண்டும்' என்ற முயற்சியைக் கழகம் விட்டுவிடவில்லை; தொடர்ந்து, கோரிக்கையை வற்புறுத்தி வந்தது.

தமிழக ஆட்சிப் பொறுப்பைக் கழகம் ஏற்றுக்கொண்டதும், அந்தப் பெயர் மாற்றப் பிரச்சினை மீண்டும் தலைதூக்கியது; பெயர் மாற்றக் கோரிக்கை மறுபடியும் கிளம்பியது.

இப்பொழுதும் இரயில்வேத்துறை, தனது பிடிவாதத்தை விட்டொழிக்க விரும்பவில்லை. ஆனல், 'பெயரில் மாறுதல் செய்யக் கூடாது' என்ற தனது பிடிவாதத்துக்குத் தக்க காரணத்தைக் கூறவும் அந்த அமைச்சுத் துறையால் முடியவில்லை. நியாயமான காரணம் இருந்தால் அல்லவா, அமைச்சுத் துறை சுட்டிக்காட்டுவதற்கு?

'டால்மியாபுரம்' என்பதற்குப் பதிலாக, 'கல்லக்குடி' என்ற பெயரை ஏற்றுக்கொள்ள முடியாது என்ற தனது முடிவுக்கு, விசித்திரமான காரணம் ஒன்றை இரயில்வேத்துறை அமைச்சர் கண்டுபிடித்து அறிவித்திருக்கின்ருர். அந்த விசித்திரமான காரணம், அறிவுக்குப் பொருந்தக்கூடியதாக அமைந்திருக்கவில்லை.

மதுரை--விருதுநகர் இரயில்வே பிரிவில் 'கள்ளிக்குடி' என்ற பெயருடைய ஒரு புகைவண்டி நிலையம் இருந்துவருகிறதாம்; 'கல்லக்குடி' என்ற பெயர் இடப்பட்டால், 'இதுவா—அதுவா' எனப் பாகுபாடு தெரிந்துகொள்ள முடியாமல் குழப்பம் ஏற்பட்டுவிடுமாம்; எனவே, இக்குழப்பத்தைத் தவிர்ப்பதற்காக, 'டால்மியாபுரம்' என்ற பெயரை, கல்லக்குடியாக மாற்ற முடியாதாம்;-- இதுதான், இரயில்வே அமைச்சர் பூஞ்சா அறிவித்திருக்கின்ற சமாதானம்!

ஒரே மாவட்டத்தில் மட்டுமல்ல—ஒரே தாலுகாவிற்குள் ஒரே பெயருடைய இரண்டு—மூன்று ஊர்கள் உள்ளன; அத்தகைய ஊர்களில் அஞ்சல் நிலையங்களும் உள்ளன. இப்படி ஒரே பெயருடைய பல ஊர்கள் இருக்கின்ற காரணத்தைக் காட்டி, 'ஒரே ஓர் ஊருக்கு மட்டும் அஞ்சல் நிலையம் இருந்தால்போதும்; மற்ற ஊர்களில் அஞ்சல் நிலையங்கள் புதிதாகத் திறக்க முடியவில்லை' என்ருே, தனித்தனி அஞ்சல் நிலையங்களைத் திறக்காமலிருந்திடவோ இந்திய அரசாங்க அஞ்சல்துறை இதுவரை தீர்மானித்துக் கொண்டதாக வரலாறு இல்லை. ஒரே பெயரைக் கொண்ட பல ஊர்களில் அஞ்சல் நிலையங்கள் இருக்கின்ற காரணத்தால், தவிர்க்க முடியாத குழப்பங்கள் ஏற்பட்டுக் கொண்டிருப்பதாக அஞ்சல்துறை இதுவரை குறைபட்டுக்கொண்டது என்ற வரலாறும் இல்லை.

ஆனல், இரயில்வே அமைச்சர் பூஞ்சா அவர்களுக்குத்தான், கல்லக்குடி எனப் பெயர் வைத்துவிட்டால், கல்லக்குடிக்குப் பிரயாணச் சீட்டு வாங்கிக்கொண்டு 'கள்ளிக்குடி' என்ற ஊருக்கு இரயில்வே பிரயாணிகள் சென்றுவிடக்கூடும்—என்ற குழப்பமும் அச்சமும் ஏற்பட்டுவிட்டிருக்கிறது!

'பெயரை மாற்றவே முடியாது' என எப்பொழுதும் கூறிவந்த முடிவை இன்றைய இரயில்வே அமைச்சர் பூஞ்சா கூறுவதுடன் இருந்திருந்தால், அதற்குரிய காரணத்தை நம்மால் புரிந்துகொள்ள முடியும். ஆனல், 'பெயரை மாற்றக்கூடாது' என்ற தமது முடிவுக்கு ஏதோ நியாயமானதும் பொருத்தமானதுமான காரணம் இருக்கிறது எனத் தமிழக மக்களை நம்பவைக்க வேண்டும் என்பதற்காக, 'கள்ளிக்குடி'யைக் காட்டி 'கல்லக்குடி கிடையாது' என அமைச்சர் அறிவிக்கத் துணிந்திருப்பது பொருந்தாச் சமாதானமாகும் என்பதுடன், நகைப்புக்குரியதுமாகும்.

—கா. க.

மத்திய அரசின் மொழிக் கொள்கைக்கு சரியான பதில் கொடுத்தது தமிழகம்

வடவரின் மொழியும் விருப்பமும் விற்பனையாகும் சந்தையா கேரளம்?

தாய் மொழியின் கழுத்தை நெறிக்க முயலும் இந்தி வெறியர்கட்கு மூக்கணங்கயிறு போடுக!

மாநில அரசுக்கு மலையாள இதழின் வேண்டுகோள்

அரசியல் ஆதிக்கம் தேட இந்திய 'ஒருமைப்பாடு' என்ற பெயரால் மற்றவர்கள்மீது தங்கள் இந்தி மொழியைத் திணிக்கத் துடித்துவரும் வடக்கத்தி இந்தி வெறியர்களின் போக்கையும், அவர்கள் ஆட்டுவிக்கும்படி ஆடிவரும் மத்திய அரசின் மொழிக் கொள்கையையும் கண்டித்து மலையாள இதழான 'கேரள சப்தம்' என்ற ஏடு எழுதியிருக்கும் தலையங்கத்தின் மொழிபெயர்ப்பு இங்கு தரப்படுகிறது:—

கேரளத்தில் இந்தி புகுத்தப்படும் முறையைப் பார்த்தால், மத்திய அரசின் மும்மொழித் திட்டத்திற்குப் பதிலாக ஒரு மொழித் திட்டம்தான் இங்கு அமுல்படுத்தப்படுகிறதோ என்ற ஐயம் ஏற்படுகிறது!

சாலையெங்கும் நாட்டப்பட்டிருக்கும் கிலோ மீட்டர் அளவைக் குறிக்கும் கற்களிலும், கைகாட்டிப் பலகைகளிலும், மற்றும் பல சாதனங்களிலும் இந்தி மட்டுமே காணப்படுகிறது!

இந்தி கற்பதற்காக அரசுச் செயலகத்தில் தனி வகுப்புகள் வேறு அதிகாரிகளுக்காகத் துவங்கப்பட்டிருக்கின்றன!

இந்தியாவின் ஒற்றுமையைக் காக்கும் பொருட்டுத் தீவிரமாக இருந்துவரும் நம்மவரில் சிலர், ஆங்கிலத்துடன் மலையாளத்தையும் துரத்திவிட்டு, அதிகார நிலையிலும் அதிகாரப்பற்றற்ற நிலையிலும் ஒரேமாதிரி இந்தியை அரங்கேற்றத் துடிதுடிப்புடன் செயல்படுகின்றனர்!

வட இந்தியாவிலிருந்து இங்கு வரும் அரசியல் தலைவர்களைப் போல், அவர்களின் விருப்பமும் மொழியும் விரைவில் விற்பனையாகும் ஒரு சந்தையாக இருக்கிறது கேரளம்!

எப்படியாயினும், இங்குள்ள பெரும்பான்மை மக்கள் இந்தி மொழிக்கு அந்நியராக இருந்து வரும் காலம் வரையில்— இணைப்பு மொழி சம்பந்தமாக இங்குள்ள அதிகார அமைப்புகள் காட்டும் பரந்த மனப்பான்மை, நமது மாநிலத்தைப் பொறுத்தவரையில் அவசியமற்றதும், அபாயகரமானதும் ஆகும்.

நமது மொழிப் பிரச்சினைக்கு இணக்கமான ஒரு பரிகாரம் பற்றி ஆராயும்பொழுது முதன் முதலாகச் சிந்திக்க வேண்டியது, அது 'நாட்டின் ஒற்றுமைக்கும் பாதுகாப்புக்கும் தகுதி பெற்றிருக்கிறதா' என்பதாகும்.

ஆட்சியாளரின் காலடியில், மக்களின் அடிப்படைப் பிரச்சினைகள் உட்படப் பல பிரச்சினைகளும் பரிகாரத்தை எதிர்பார்த்து ஏங்கிக்கிடக்கும் வேளையில், அவற்றையெல்லாம் ஒதுக்கித்தள்ளி பலதரப்பட்ட மொழி பேசுவோரின் உணர்ச்சிகளையெல்லாம் தட்டியெழுப்புவதற்காக வேண்டும் என்றே அகாலத்தில் இந்தியை இணைப்பு மொழியாக்க மத்திய அரசு துணிந்து செயல்படுகிறது.

அவர்களது இலட்சியம், நாட்டின் ஒருமைப்பாட்டுக்கு வலிவூட்டுவதாக இருந்திருக்கும் பட்சத்தில், இலக்கிய-விஞ்ஞானத் துறைகளில் ஆங்கிலத்தைப்போலவே இந்தியையும் வளரச் செய்து, பிறகு இணைப்பு மொழியாக அதனை ஆக்க முனைந்திருக்க வேண்டும்.

மேலும், பலதரப்பட்ட பதினன்கு மொழியினர், தங்களுக்கு அயல் மொழியாக உள்ள ஒரு மொழியை ஏற்கும் பக்குவமான மனநிலையை அடைவதற்கு நீண்ட நாட்கள் தேவைப்படும் என்பதையும் அவர்கள் மறந்தனா!

இது மத்திய ஆட்சியினருக்குக் கொள்கை அடிப்படையில் ஏற்பட்ட ஒரு தோல்வியல்ல; மாருக பரந்த நிலப்பரப்புடைய வட இந்திய மாநில மக்களிடையே அரசியல் ஆதிக்கம் செலுத்தத் திட்டமிட்டுச் செய்யப்பட்ட நடவடிக்கையேயாகும்.

உ.பி., பீகார், மத்தியப் பிரதேசம் போன்ற மாநில மக்கள், மத்திய அரசின் மொழிக் கொள்கையைச் செயல்படுத்தக் கோரிப் போருக்குத் தயாரானது அரசியல் அடிப்படையில்தானே!

தமிழகத்திலும், கருநாடகத்திலும், நாட்டு ஒற்றுமையைக் கருதி அறிவிக்கப்பட்ட மொழிக் கொள்கைக்குக் கிடைக்கப் பெற்ற வரவேற்பின் நெருப்பும் புகையும் இன்னமும் அடங்கிவிடவில்லை! மத்திய அரசின் கட்டாயத் திணிப்புக்கு, அவர்கள் அதே பாணியில் பதிலளித்திருக்கின்றனர்!

தமிழகத்திற்குள் 'இந்தி படிக்க மனமில்லை' என, அம்மாநில

(3-ம் பக்கம் பார்க்க)

கூட்டிக் கழித்துப் பாருங்கள்-- 'கொதிப்பு நிலை'யின் காரணம் தெரியும்!

கோவைச் சம்பவங்கள்--- காங்கிரசின் கைவண்ணம்தானு?

'இந்து' இதழ் தெரிவிக்கும் உண்மைகள்

"தமிழக முதலமைச்சர் கூட்டிய 'மாணவர் சந்திப்பு'க்கு சென்று திரும்பிய கோவைப் பிரதிநிதிகள், 'இது வெறும் தி. மு. க. வேடம்' (It was all D. M. K. Show) என்று கூறிவிட்டுத் திரும்பினர்கள்.

'திரும்பவும் போராட்டத்தினைத் தொடர்ந்து நடத்துவதா — வேண்டாமா' என்பது பற்றிக் கட்சி அடிப்படை ஏதுமில்லாத ஒரு முடிவுக்கு வருவதற்காக மாநிலமெங்கும் உள்ள மாணவர் பிரதிநிதிகளடங்கிய மாநாடு ஒன்றினை அவர்கள் கூட்டினர்.

அதன்படி சனவரி 21-ந்தேதி கோயம்புத்தூரில் நடந்த கூட்டத்தில், 'தி. மு. க. மாணவர்கள்' என்று கூறப்பட்ட ஒரு குழு, கூட்டத்தினின்று வெளிநடப்புச் செய்தது; 'காங்கிரசு சார்புடைய மாணவர் தலைவர்கள்' எனபவர்கள் சிலர் அக்கூட்டத்தில் இருந்ததுதான் அதற்குக் காரணம் எனக் கூறப்படுகிறது.

[கூட்டம் நடந்த அதே உணவு விடுதியில், தமிழ்நாடு காங்கிரசுத் தலைவரும் அன்றையதினம் தங்கியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது—ஆசிரியர்; 'நம் நாடு']

இந்த வெளிநடப்புக்குப் பின்னர், மாணவர் அமைப்பு இரண்டாகப் பிரிந்தது; கோவை—நீலகிரி—தர்மபுரி—சேலம் ஆகிய பகுதிகளில் நல்ல செல்வாக்கினைப் பெற்றுள்ளதாகக் கூறப்படும் — 'கோயம்புத்தூர் இந்தி எதிர்ப்பு மாணவர் குழு' என்ற அமைப்பு, தமிழ்நாடு இந்தி எதிர்ப்புக் குழுவினின்றும் பிரிந்தது; போராட்டத்தினைத் தொடர்ந்து நடத்தவும் முடிவு செய்தது.

இப்போராட்டத்தினைத் தொடர்ந்து நடத்தும் கோவை மாணவர் குழு, தி. மு. க. மாணவர் குழுவினைவிட அதிகச் செல்வாக்குடையது.

கோவையிலுள்ள தி. மு. க. மாணவர் குழு, 'போராட்டத்தினை எப்படி நிறுத்துவது' என்பதில், பெற்ருேர்கள்—ஆசிரியர்கள் ஆகியவர்களுடைய முயற்சியில் இறங்கியுள்ளது."

இது, 27-2-68 'இந்து' இதழில், அதன் கோயம்புத்தூர் நிருபர் தந்துள்ள கட்டுரையின் ஒரு பகுதியாகும்.

ஒருமுறைக்குப் பலமுறை படியுங்கள்--'கோவையில் நடைபெறும் சம்பவங்களுக்குப் பின்னணியில் இருப்பவர் யார்' என்ற உண்மை புலப்படும்! அண்ணு -- இராஜாஜி கூட்டு அறிக்கையின் முழுக் கருத்தும் எளிதில் விளங்கும்!

கல்வித் துறைக்குத் தமிழக அரசு செலவிடும் தொகை

முழுப் பயன் கிட்ட நிர்வாகச் சீரமைப்புத் தேவை

வேலூர் கல்வித் துறைப் பணியாளர் மாநாட்டில் அமைச்சர் நெடுஞ்செழியன் விளக்கம்

தமிழகக் கல்வித் துறை அலுவலகப் பணியாளர் சங்கத்தின் இரண்டாவது மாநில மாநாடு 11—2—68-ம் நாளன்று வேலூர் ஊரிஸ் கல்லூரி அரங்கில் நடந்தேறியது. தமிழகத்தின் எல்லாப் பகுதிகளிலுமிருந்தும் ஆயிரத்திற்கும்மேற்பட்ட பிரதிநிதிகள் வந்திருந்தனர்.

காலை 8-மணிக்கு கோட்டை நுழைவாயிலில் உள்ள காந்தி சிலைக்கு மலர்மாலை அணிவித்து விட்டு மாநாட்டுப் பிரதிநிதிகள் ஊர்வலமாகப் புறப்பட்டு முக்கிய சாலைகள்—கடைத் தெருக்கள் வழியாக மாநாட்டுப் பந்தலை அடைந்தனர்.

மாநாட்டிற்கு திரு. கே. ஆர். சீனிவாசராகவன் தலைமைதாங்கினார்; திரு. அ. முனுசாமி வரவேற்றார்.

துணைக் குடியரசுத் தலைவர், தமிழகக் கல்வி அமைச்சர், தமிழக உள்ளாட்சித்துறை அமைச்சர், தமிழகச் செய்தித்துறை அமைச்சர், கல்வித்துறை உயர் அலுவலர்கள் ஆகியோரிடமிருந்து வந்திருந்த வாழ்த்துச் செய்திகள் வாசிக்கப்பட்டன.

தமிழக என் ஜி. ஜி. ஓ. சங்கத் தலைவர் வ. தேவநாதன், பொதுச் செயலாளர் இ. தியாகராசன் ஆகியோர், அரசு ஊழியர்கட்கும் குறிப்பாக பல ஆண்டுகளாக தேக்க நிலையிலேயே இருந்துவரும் கல்வித் துறை அலுவலகப் பணியாளர்கட்கும் வழங்கப்பட வேண்டிய உரிமைகளைப் பற்றி விரிவாகவும், தெளிவாகவும் எடுத்துச் சொன்னார்கள்.

மாநாட்டைத் தமிழகக் கல்வி இணை இயக்குநர் வி. டி. டைடஸ் துவக்கிவைத்துப் பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

"சுதந்தரம் பெற்று இருபது ஆண்டுகள் ஆகியும் கல்வித் துறை வரலாற்றிலேயே நாம் அனைவரும் இப்பொழுதுதான் கூடி, 'நாம் என்ன செய்துகொண்டு இருக்கிறோம்' என்பதைப் பற்றிப் பேசுகிறோம்; இதைப் பல ஆண்டுகளுக்கு முன்பே செய்திருக்க வேண்டும்.

"கல்வித் துறையில் நிர்வாக அமைப்பு முறை விஞ்ஞான ரீதியாக மாற்றியமைக்கப்பட்டால் தான், கல்விக்காகச் செலவு செய்யப்படும் பல கோடிக்கணக்கான ரூபாய் மக்களுக்காகப் பயன்படும்."

பிற்பகல் நிகழ்ச்சியில் தமிழகப் பள்ளிக் கல்வி இணை இயக்குநர் எஸ். வி. சிட்டிபாபு, மாநாட்டுச் சிறப்பு மலரை வெளியிட்டு அறிவுரை வழங்கினார்.

தமிழகக் கல்வி அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"கல்வித் துறையைச் சீர்திருத்தி அமைப்பது அவசியம்; கல்விக்காக முன்பு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 11 கோடி செலவு செய்யப்பட்டது; தற்போது ரூ. 54 கோடி செலவழிக்கப்படுகிறது; இவ்வளவு பெரிய தொகை கல்விக்காகச் செலவிடப்படும்போது அதன் முழுப் பயனையும் மக்கள் பெறுவதற்கு கல்வித் துறை நிர்வாக அமைப்பைச் சீர்படுத்துவது அவசியமாகும்; அதுவும் விரைவாகச் செய்யப்படவேண்டும்; ஆனால், அவசரப்பட்டு எந்தக் காரியத்தையும் செய்யக்கூடாது.

"நான் கல்வி அமைச்சராகப் பணியை ஏற்றுக்கொண்டதனாலேயே இத்துறையைப் பற்றிய எல்லாவித நுணுக்கங்களையும் தெரிந்திருக்க நியாயமில்லை; சங்கத்தின் கருத்துக்களை வரவேற்கிறேன். கல்வித் துறை அதிகாரிகளையும் கலந்து ஆலோசித்து கல்வித் துறையை செம்மையாகவும் சீராகவும் சிக்கனமாகவும் செயல்படத்தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ள ஆவன செய்கிறேன்."

பொதுச்செயலாளர் எம். ஜி. சாமி அறிக்கை வாசித்தார். ஜி. பூங்காவனம் நன்றி கூறினார்.

சேலம் அரசினர் கலைக் கல்லூரி தி. மா. மு. க.

சேலம் அரசினர் கலைக் கல்லூரி தி.மா.மு.க. கூட்டம், 6—2—68-ல் தி சு. வர்கீசு தலைமையில் நடைபெற்றது; அதுபோது, க. செயபால் செயலாளராகவும், மு. சு. இராமாச்சாரி துணைச் செயலாளராகவும், அ. இரா. சண்முகம் பொருளாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

7—2—68-ல், செயலர் க. செயபால் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில், செயற்குழு உறுப்பினர்கள் 15 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

மத்திய அரசின்...

(2-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

அரசு தீர்மானித்திருக்கிறது; 'இது, குறுகிய மனப்பான்மையின் விளைவாகும்' என்று சில பெரிய மனிதர்கள் கூறுகின்றனர்.

இரண்டு அல்லது மூன்று வடக்கத்தி மாநிலங்களின் மொழி வெறியைப் பரந்த மனப்பான்மையாகவும், நிலைமைக்கேற்ற — புத்திசாலித்தனமான தமிழகத்தின் தீர்மானத்தைக் குறுகிய மனப்பான்மையாகவும் கருதும் அறிவின்மை எங்களுக்கு இல்லை!

மத்திய அரசை எதிர்க்க வேண்டிய கட்டத்திற்குத் தமிழகத்தை ஆளாக்கினதற்குள்ள முழுப் பொறுப்பும் மத்திய அரசையே சாரும்!

கிரேக்க, லத்தீன் மொழிகளைப் போன்று இந்தியும் கேரள மக்களுக்கு அந்நிய மொழியேயாகும்.

அவர்களுக்கு உதவும்பொருட்டு எழுதி வைக்கப்படும் ஊர்ப் பெயர்கள் எல்லாம் இந்திமொழியில் உள்ளன!

இப்படிப்பட்ட செயல்களை ஏற்றுக்கொள்ள மறுத்ததுதான், தமிழகமும் கருநாடகமும் செய்த தவறுகளாகும்!

இந்தி மொழி மீது எங்களுக்கு எவ்வித வெறுப்புமில்லை! மொழி வெறியரின் கையில் அது ஓர் ஆயுதமாகப் பயன்படுவதுதான் எங்களை வருத்தமுறச் செய்கிறது!

நீதி–நிர்வாகம் உட்பட ஆட்சி அமைப்பில் உதவவும், விஞ்ஞான–தொழில் நுட்பத் துறைகளில் பயன்படுத்தும் அளவுக்கும் இந்தி வளர்ச்சியடையும் வரையில் ஆங்கிலமே ஆட்சி மொழியாக இருந்துவரச் செய்வதும், மாநில மட்டத்தில் பயிற்று மொழியாகவும் ஆட்சி மொழியாகவும் வட்டார மொழிகளைப் பயன்படுத்த வேண்டுவதுமே, நாட்டு முன்னேற்றத்துக்கு முதற்சலுகை தரும் ஓர் அரசு செய்ய வேண்டிய கடமைகளாகும்.

மாறாக, மத்திய அரசும் சில வட மாநிலங்களும் கடைபிடித்து வரும் மொழிக் கொள்கையின் விளைவு, நாட்டு ஒற்றுமைக்குப் பதிலாக நேர்மாறானதாகத்தான் இருக்கும்.

என்னவாயினும், தாய்மொழியின் கழுத்தை நெறித்து, தேவையற்ற நேரங்களிலும், தேவையற்ற இடங்களிலும் இந்தியை அரியாசனமேற்றும் இங்குள்ள இந்தி பக்தர்களுக்கு மூக்கணாங்கயிறு போட்டுப் பிடிக்க கேரள அரசு முயலுவது நன்மை தருவதாகும்!

தொட்டியத்தில் அமைச்சர் முத்துசாமி

ஊராட்சி ஒன்றியம் சார்பில் வரவேற்பு

உள்ளாட்சித்துறை அமைச்சர் மா. முத்துசாமி அவர்களுக்கு தொட்டியம் ஊராட்சி ஒன்றியத்தின் சார்பில் 3—2—68 அன்று வரவேற்பு அளிக்கப்பட்டது. மகளிரின் ஆரத்தியோடு மலர் தூவி அமைச்சர் வரவேற்கப்பட்டார்.

திருச்சி மாவட்டச் சீரணித் தலைவரும், மாவட்ட தி. மு. க. செயலாளரும், லால்குடி ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவருமாகிய திரு. அன்பில் தர்மலிங்கம் தலைமை வகித்தார்.

தலைமையுரைக்குப் பின், தொட்டியம் பகுதிச் சட்டமன்ற உறுப்பினர் திரு எஸ். கே. வடிவேல், வரவேற்பு விழாவை சிறப்பாக ஏற்பாடு செய்தமைக்கு நன்றி கூறினார்.

பின், அமைச்சர் மா. முத்துசாமி சொற்பொழிவு நிகழ்த்தினார்; 'ஊராட்சிமன்றத் தலைவர்கள், கட்சி வேறுபாடு — மனப்பூசல் ஆகியவற்றை அகற்றி மக்களுக்குத் தொண்டு செய்வதையே குறிக்கோளாகக் கொள்ள வேண்டும்' எனக் கேட்டுக்கொண்டார்.

ஊராட்சி ஒன்றியத் தலைவர்களை, 'ஒன்றியக் குழுத் தலைவர்கள் என அழைக்கலாம்' எனவும் ஆலோசனை வழங்கினார்.

ஊராட்சி ஒன்றியத் தலைவரும், சட்டமன்ற உறுப்பினரும் கட்சி வேறுபாடின்றி ஒற்றுமை மனப்பான்மையோடு செயல்பட வேண்டுமெனவும், அப்போது தான் அரசு திட்டங்கள் செவ்வனே செயல்படும் என்றும், ஊராட்சி ஒன்றியம் ஆற்றும் பணியினை வைத்துத்தான் அரசிடம் மக்களுக்கு நம்பிக்கை ஏற்படுமென்றும், எனவே, ஒற்றுமை மனப்பக்குவத்துடன் திட்டங்களைச் செயல்படுத்தி மக்கள் குறைகளை அவ்வப்போது தீர்க்கலாம் எனவும் அறிவுரை வழங்கினார்.

ஊராட்சி ஒன்றியக் குழுப் பெருந்தலைவர் திரு. இரா. விசுவநாதன் நன்றி நவின்றார்.

இருபதாண்டு காங்கிரசு ஆட்சியின் பலன்!

வேலையில்லாத் திண்டாட்டமும் வறுமையும் பெருகிவிட்டன

திட்டமிட்டவர்கள்மீது குற்றஞ்சாட்டுகிறார் சஞ்சீவியார்

குல்பர்க்கா, பிப். 27—

" திட்டமிட்டவர்கள் செய்துவிட்ட தவறினால் நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டம் பெருகியிருக்கிறது "

என்று, நாடாளுமன்ற மக்களவைத் தலைவர் திரு. சஞ்சீவி(ரெட்டி)யார் கருத்தறிவித்திருக்கிறார்.

கருநாடக மாநிலத்தைச் சேர்ந்த குல்பர்க்கா சட்டக் கல்லூரி மாணவரிடை அவர் பேசுகையில் கூறியதாவது :—

" திட்டமிட்டவர்கள் எங்கேயோ தவறு செய்துவிட்டனர்; அந்தத் தவற்றை இப்போது மறைக்க முயலுகின்றனர்.

மிகக் குறுகிய காலத்தில் ஏராளமான பல்கலைக் கழகங்களும், பொறியியற் கல்லூரிகளும், மருத்துவக் கல்லூரிகளும் தோற்றுவிக்கப்பட்டிருக்கின்றன; இவற்றின் மூலம் இலட்சக்கணக்கானவர்கள் பட்டம் பெற்று வெளியேறியுள்ளனர்!

படித்துப் பட்டம் பெற்றவர்களிடை வேலையில்லாத் திண்டாட்டம் பெருகிவிட்டது.

இன்னும் சில ஆண்டுகளுக்குள் ஆந்திரத்தில் மட்டும் பத்தாயிரம் பொறியர்கள் வேலையில்லாமல் இருப்பார்கள்.

வறுமையாலும், நிலையான எதிர்காலம் இல்லாததனாலுமே மாணவரிடையே அமைதியின்மையும் ஒழுக்கமின்மையும் நிலவுகின்றன!

எனவே, தரமுள்ள கல்வி பற்றியும், முறையான திட்டத்துடன் கூடிய கல்வி பற்றியும் சிந்திக்க வேண்டிய கட்டம் வந்திருக்கிறது."

[காங்கிரசுக் கட்சியின் பழம்பெரும் புள்ளிகளில் ஒருவரான திரு. சஞ்சீவியார், மத்திய அரசிலும் மாநில அரசிலும் அமைச்சராக இருந்திருப்பதுடன், அனைத்திந்தியக் காங்கிரசுத் தலைவராகவும் இருந்தவர் என்பது தெரிந்ததே. திட்டமிட்டதில் உள்ள கோளாறு இவருக்கு இப்போதுதான் புரிகிறது போலும்!]

எட்டரை கிராமத்தில் புதிய சாலை

சீரணியினரின் ஆக்கப் பணி

அந்தநல்லூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த எட்டரை கிராமத்திலிருந்து போலம்பட்டி வரை செல்லும் மங்கம்மா சாலையை, ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த சீரணியினர், கடந்த 31—1—68 அன்று சுமார் 2 பர்லாங் நீளத்திற்குச் சீரமைத்துப் புதிதாகச் சாலை போட்டனர்.

இப்பணியில் 10 சீரணித் தொண்டர்களும், 30 கிராமப் பெருங்குடி மக்களும் பங்குகொண்டனர்.

இப்பணியினை, எட்டரை ஊராட்சிமன்றத் தலைவர் மு. நடராசன் தலைமையில் அந்தநல்லூர் ஊராட்சி ஒன்றிய ஆணையர் எம். செஞ்சப்பன் துவக்கிவைத்தார்.

திருப்பராய்த்துறை ஊராட்சி மன்றத் தலைவர் தி. நெ. வையாளி, புலியூர் முன்னேற்றக் கழகச் செயலாளர் கரு. இராமன், சீரணியின் இலட்சியப் பணி குறித்து சிறப்புச் சொற்பொழிவாற்றினர்.

இவ்வேலையைத் தொடர்ந்து நடத்த ஊராட்சிமன்றத்தினரும் ஏனைய சீரணித் தொண்டர்களும் முடிவுசெய்துள்ளனர்.

புதுக் கல்லூரி தி. மா. மு. க.

சென்னை புதுக் கல்லூரி தி. மா. மு. க. கூட்டம், 14-2-68-ல் புதுக் கல்லூரியில் நடைபெற்றது; தோழர் முத்துஜா தலைமைதாங்கிப் பேசுகையில் த. நா. கா. க. தலைவர் சி. சுப்பிரமணியத்தின் போக்கைக் கண்டித்தார்.

செயலாளர் புகாரி பேசுகையில், மாணவர்கள் தமிழக அரசுக்குத் தங்களின் முழு ஆதரவையும் தரவேண்டுமெனக் கேட்டுக்கொண்டார்.

காலியாக இருந்த துணைச் செயலாளர் பதவிக்கு எம். சாகுல் அமீது தேர்ந்தெடுக்கப்பட்டார்.

"கல்லூரியில் தகுந்த காரணமின்றி வேலைநிறுத்தம் நடந்தால், அதில் தி. மா. மு. க.-வினர் கலந்துகொள்வதில்லை" என்று கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

கூட்டத்தில், நான்கு தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

சேலம் மாவட்ட தி. மா. மு. க.

சேலம் மாவட்ட தி. மா. மு. கழகத்தில் உறுப்பினராகச் சேரவிரும்பும் பள்ளி—கலை—பொறியியல்—தொழிற்கல்விக்கூட மாணவர்கள், கீழ்க்கண்ட முகவரிகளில் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள் :—

இரா. இரகுபதி, செயலர், 64, குலசேகர ஆழ்வார் தெரு, சேலம்-1.

கோ. குணசேகரன், 30, எண் 2, மார்க்கெட் தெரு, அம்மாப்பேட்டை, சேலம்-3.

கே. செல்வராசன், 13, பெருமாள் செட்டி தெரு, அரிசிபாளையம், சேலம்-9.

ஓய்வுபெறும் பராங்குசத்திற்கு வழியனுப்பு --- பாராட்டு விழா

பொன்மலை தொழிலாளத் தோழர்களின் அன்பு வெள்ளத்திடையே வீடுவரை ஊர்வலம்

திருச்சி மாவட்ட தி. மு. கழக அவைத் தலைவரும், தட்சிண இரயில்வே எம்ப்ளாயீஸ் யூனியன் துணைத் தலைவருமான பொன்மலை பராங்குசம், கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாகப் பொன்மலைத் தொழிற்சாலையில் சிறப்பாகப் பணியாற்றி, 22—2—68 மாலை 5 மணியளவில் ஓய்வு பெற்றார்.

அவருக்கு—அவர் பணியாற்றி வந்த 'மெஷின் ஷாப்' தொழிலாளர்களால் சிறப்புமிக்க வழியனுப்பு விழா நடத்தப்பெற்று அன்பளிப்புகளும் வழங்கப்பட்டன.

அடுத்து பொன்மலை Dy.C M.E. அலுவலக ஊழியர்கள் சார்பில் தேநீர் விருந்தும் பாராட்டும் வழங்கப்பட்டது.

பின், தொழிற்சாலையைவிட்டு நூற்றுக்கணக்கான தொழிலாளர்கள் புடைசூழ ஊர்வலமாக வெளியே அழைத்துவரப்பட்ட போது, முக்கிய நுழைவாயிலில் நூற்றுக்கணக்கான தொழிலாளர்கள் புடைசூழ—அனந்தநம்பியார் எம்.பி. அவர்களும், பொன்மலை கிளைத் தலைவர் எல். கிருஷ்ணமூர்த்தியும் பொன்மலை வட்டாரக் கழகத் தோழர்களும் கூடிநின்று வரவேற்று, ஊர்வலமாகவே அவரது இல்லம்வரை அழைத்துச் சென்றனர்.

வீட்டு வாயிலில் நிகழ்ந்த பாராட்டு விழாவிற்கு திரு. அனந்த நம்பியார் தலைமையேற்று, பராங்குசம் அவர்களின் சீரிய தொண்டினைப் பாராட்டிப் பேசுகையில், கடந்த 30 ஆண்டுக்காலத்தில் தொழிலாளர்களுக்கு அவர் ஆற்றிய கடமை குறித்தும், அவரது பணி என்றென்றும் இரயில்வேத் தொழிலாளருக்குத் தேவை என்றும் கூறினார்.

அடுத்து, தட்சிண இரயில்வே எம்ப்ளாயீஸ் யூனியன் துணைத் தலைவர் பண்ணுருட்டி குப்புசாமி, திருச்சி டிவிஷன் தலைவர் நம்மாழ்வார், பொன்மலை கிளைத் தலைவர் எல். கிருஷ்ணமூர்த்தி, தென்னக இரயில்வே தொழிலாளர் தோழமைக் கழகத் தலைவர் சி. கண்ணையன், சட்டமன்ற உறுப்பினர்கள் து. ப. அழகமுத்து, எம். எஸ். மணி, திருச்சி பாண்டுரங்கன் ஆகியோரும் அவரைப் பாராட்டிப் பேசினர்.

தோழர் பராங்குசம் அவர்களின் நன்றி கூறலுடன் விழா முடிவுற்றது.

விழாவில் பராங்குசம் அவர்களுக்கு தென்னக இரயில்வேத் தொழிலாளர் தோழமைக் கழகம், தட்சிண இரயில்வே எம்ப்ளாயீஸ் யூனியன், பொன்மலை மே. க. கோட்டை கிளைக் கழகம், பொன்மலைப்பட்டி கிளைக் கழகம், தமிழ் மன்றம், அம்பிகாபுரம் அண்ணா மன்றம், மே. க. கோட்டை மஜீத் மன்றம் ஆகியவை சார்பிலும், பொன்மலை தொழிற்சாலையிலுள்ள ஷாப் வாரியாகவும், பொன்மலை இரயில்வே எஞ்சினீயரிங் ஸ்டோர்ஸ் டெப்போ தொழிலாளர்கள் சார்பிலும் மாலைகளும், கைத்தறி ஆடைகளும் அணிவிக்கப்பட்டன.

நடக்க இருப்பவை

பொதுக்கூட்டங்கள்

29--2--68

போடிநாய்க்கனூர்

கருணாநிதி மன்றச் சார்பில் மாலை 6 மணிக்கு 15-வது பகுதி அண்ணா திடலில்: பேசுவோர்: திருவை அண்ணாமலை, டி.ஆர். இராசன் பி.ஏ.,பி.எல்., எஸ்.கே. பாலசுப்பிரமணியம், ஞா. சு. பாண்டியன், ப. இராசவேல், பி. சக்கரை.

1--3--68

காஞ்சிபுரம்

28-வது வட்ட பகுத்தறிவு மன்ற 8-வது ஆண்டுவிழா; மாலை 6 மணிக்கு பெரிய கம்மாளத் தெருவில்; தலைவர்: டி. சீனுவாசன்; பேசுவோர்: காஞ்சி கல்யாணசுந்தரம், சி.வி.எம். அண்ணாமலை எம்.எல்.ஏ., இரா.சனார்த்தனம், கே.எம். இராசகோபால் எம்.எல்.ஏ., சரசுவதி வெங்கடேசன் எம்.சி., சி. ஆறுமுகம், ஜி. திருவேங்கடம், எம்.கே.என். பத்மநாபன், பி.எஸ். கன்னியப்பன், வ. இராதாகிருட்டினன்.

மேற்கு வங்க ஐக்கிய முன்னணி தூதுக் குழு

குடியரசுத் தலைவரைச் சந்திக்கும்

மேற்கு வங்க ஐக்கிய முன்னணி தூதுக் குழு ஒன்று குடியரசுத் தலைவர் டாக்டர் ஜாகீர் உசேனை சந்திக்கும் என்று தெரிகிறது.

'இந்த ஆண்டு மே—ஜுன் திங்களில் மேற்கு வங்கத்தில் இடைத் தேர்தல் நடத்த வேண்டும்; ஆளுநர் தர்மவீராவைத் திரும்பப் பெற வேண்டும்" என்று குடியரசுத் தலைவரிடம் அந்தத் தூதுக் குழு வற்புறுத்தும்.

அரசியல் சட்டத் திருத்தமே பரிகாரம்

"'இந்திதான் இந்தியாவின் ஆட்சிமொழி' என்று கூறும் அரசியல் சட்டத்தின் 343-வது விதியை, மாறியுள்ள இன்றையச் சூழ்நிலையில் செயற்படுத்த முடியாது; அதனை மாற்றி அமைப்பதற்காக நாடாளுமன்றம் என்ன செய்ய வேண்டும் என்பதைத் தீர்மானிக்க உதவும் வகையில், நாடு முழுவதிலும் ஒருமித்த கருத்து உருவாகக வேண்டும்" என்று பெங்களூரைச் சார்ந்த திரு. வி. டி. சீனிவாசன் என்பவர், ('டெக்கான் ஹெரால்டு' 20 2-68 இதழில்) கருத்தறிவித்திருக்கிறார்.

இந்தியாவிற்கு அரசியல் சட்டத்தை உருவாக்கித் தந்த அமைப்பு, இந்தியை, 'ஆட்சி மொழி' என்று அறிவித்துத் தீர்மானம் நிறைவேற்றியபொழுது, மொழிவழி மாநிலங்கள் இருக்கவில்லை என்பதையும், 1956-ல் இந்திய அரசு அமைத்த ஒரு குழு (எஸ்.ஆர்.சி.) அறிக்கை தந்த பிறகுதான் அவை ஏற்பட்டன என்பதையும், காஷ்மீர் பற்றிய பூசல் எழுந்தபொழுது இந்திய அரசு, 'காஷ்மீர், இந்தியாவில் இருக்கவேண்டுமா அல்லது பாகிஸ்தானில் சேரவேண்டுமா என்பதைப் பின்னர் வாக்கெடுப்பு நடத்தித் தீர்மானித்துக் கொள்வோம்' என்று கூறிவிட்டு, இப்பொழுது, 'காஷ்மீரிலும் இந்தியாவிலும் அன்றிருந்த சூழ்நிலை மாறிவிட்டபடியால் பழைய வாக்குறுதியை நிறைவேற்றுவது தேவையில்லை' என்று கூறிவருவதையும் சுட்டிக் காட்டி, 'அரசியல் சட்டத்தின் 343-வது பிரிவைத் திருத்தியே ஆகவேண்டும்' என்று வலியுறுத்தியிருக்கிறார்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

கொடுமைகள் பல இழைத்த காங்கிரசுக்காரர்களா சனநாயக உரிமை பேசுவது?

"'தமிழகத்தில் சனநாயக உரிமை இல்லை—பாதுகாப்பு இல்லை' என்று கூறி, 'சனநாயக உரிமை நாள்' கொண்டாடுகிறார்கள்! அவர்கள் கொண்டாடுகிற சனநாயக உரிமை நாளில், அவர்களது தலைவர்களுக்கே உற்சாகமில்லை; அதனால்தான் அந்த நாளில் காமராசர் கலந்துகொள்ளவில்லை; சுப்பிரமணியம் கலந்துகொள்ளவில்லை; அவர்களைப் போன்ற தலைவர்கள் கலந்துகொள்ளவில்லை!

"யார் யாரோ, எங்கு எங்கோ பேசுகிறார்கள்—'சனநாயக உரிமை பறிபோய்விட்டது' என்று! ஆனால், உண்மையில் சனநாயக உரிமை பறிபோய் விட்டதா?

"உண்மையான சனநாயக உணர்வு பெற்றிருந்ததால்தான், நாங்கள், சர்வ சாதாரணமான நிகழ்ச்சிகளைக்கூடப் பிரும்மாண்டமான நிகழ்ச்சிகளாகக் கருதி நடவடிக்கை எடுத்துவருகிறோம்.

"அவர்களைக் கேட்கிறேன்—எந்த நியாயமான குற்றச்சாட்டைக் கூறி நாங்கள் அவற்றைப் புறக்கணித்திருக்கிறோம்? வேட்டைக்காரன்புதூரில் ஒரு தகராறு; 'விசாரணை வேண்டும்' என்று கோரப்பட்டது; உடனே முதலமைச்சர் அவர்கள், அந்தத் தகராறை விசாரிக்க ஓர் உயர்தர அதிகாரியை நியமித்து, விசாரித்து முழுத் தகவலையும் அளிக்குமாறு சொன்னார்.

"தேனியில் நடந்த தி. மு. கழகக் கூட்டத்தில், 'கல்லெறிந்தார்கள்' என்ற குற்றஞ்சாட்டியே இரு காங்கிரசுக்காரர்கள் கைது செய்யப்பட்டார்கள்; அவர்களை அழைத்துச் செல்லும்போது, தேனியில் திருவிழாக் கூட்டம் இருந்த காரணத்தால், 'எங்கே தப்பி ஓடிவிடுவார்களோ' என்று போலீசார், கைவிலங்கிட்டு அழைத்துச் சென்றிருக்கிறார்கள்.

"இது பற்றிக் கருத்திருமன் சட்டமன்றத்தில் கூறியபோது, முதலமைச்சர், 'அப்படி எந்தத் தகவலும் என்னிடம் இல்லை' என்று கூறினார்; ஆனால், மறுமுறை சட்டமன்றம் கூடியபோது, எந்தக் காங்கிரசுக்காரரும் கேட்காதபோதே முதலமைச்சர் எழுந்து, 'காங்கிரசுக்காரர்கள் கைவிலங்கு இடப்பட்டார்கள் என்று இப்போது தெரியவந்தது; கைவிலங்கு இடப்பட்டதற்காக வருந்துகிறேன்; 'அரசியல் காரணங்களுக்காகக் கைது செய்யப்படுகிறவர்களுக்குக் கைவிலங்கு இடப்படுவது தவறு' என்பதற்காக, குறிப்பிட்ட இரு போலீசுக்காரர்களை 'சஸ்பெண்டு' செய்திருக்கிறேன்; சரியான தகவல் தராத போலீசு அதிகாரியைக் கண்டித்திருக்கிறேன்; விலங்கிட்ட போலீசுத் தலைமைக் கான்ஸ்டபிளுக்கு சம்பள உயர்வு நிறுத்தப்பட்டிருக்கிறது' என்று கூறினார்.

"இரண்டு காங்கிரசுக்காரர்களுக்கு விலங்கிடப்பட்டதற்காக நடவடிக்கை எடுத்து சனநாயக உரிமையை நிலைநாட்டியது கழக அரசு! ஆனால், விலைவாசிப் போராட்டத்தின்போது வேலூர்ச் சிறையிலிருந்து, சட்டமன்ற உறுப்பினரும் தாழ்த்தப்பட்ட இனத்தைச் சார்ந்தவருமான ஏ. ஜி. பாலகிருஷ்ணன், உடல்நலக் குறைவு காரணமாக மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டபோது கைவிலங்கிட்டு அழைத்துச் சென்றது காங்கிரசு ஆட்சி!

"இன்றைய சட்டப் பேரவைத் தலைவர் ஆதித்தனார், மாத்தூர் விவசாயிகளின் போராட்டத்தின்போது கைவிலங்கிட்டது காங்கிரசு ஆட்சி!

"இன்றைய அமைச்சரான ஏ. கோவிந்தசாமி அவர்களை, சென்னை மத்திய சிறைச்சாலையிலிருந்து மத்திய மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார்கள். மத்திய சிறைச்சாலைக்கும்—மத்திய மருத்துவமனைக்கும் எவ்வளவு தூரம் என்பது உங்களுக்குத் தெரியும். கூப்பிடுதூரமே உள்ள மருத்துவமனைக்கு, கோவிந்தசாமி அவர்கள், போலீசு வானில் அழைத்துச் செல்லப்பட்டார்; போலீசு வானில் இருந்த அவருக்கு விலங்கு இட்டுத்தான் அழைத்துச் சென்றது காங்கிரசு ஆட்சி!

"இரண்டு காங்கிரசுக்காரர்களுக்கு விலங்கு மாட்டியதற்காக நடவடிக்கை எடுத்த கழக ஆட்சி சனநாயக உரிமை காக்கும் ஆட்சியா? அல்லது சட்டமன்ற உறுப்பினரான ஏ. ஜி. பாலகிருஷ்ணனுக்கு—ஆதித்தனாருக்கு—கோவிந்தசாமிக்கு விலங்கு மாட்டியபோது அதுபற்றித் துளி வருத்தமும் தெரிவிக்காத ஆட்சி சனநாயக உரிமை காக்கும் ஆட்சியா?

"இருபது ஆண்டுகளாக சனநாயக உரிமைகளைக் காற்றில் பறக்கவிட்ட காங்கிரசுக்காரர்களே—நீங்களா சனநாயக உரிமை பற்றிப் பேசுவது?

"இரவு 12 மணிக்கு என்னைக் கைது செய்து—கைது செய்த காரணத்தையும் கூறாமல்—எங்கே அழைத்துச் செல்கிறோம் என்பதையும் கூறாமல் 400 மைல்களுக்கு அப்பால் கொண்டு சென்று பாளையங்கோட்டையில் என்னைச் சிறையில் அடைத்த நல்லவர்களே! வல்லவர்களே! நீங்களா சனநாயக உரிமை பற்றிப் பேசுவது?

"தேர்தல் நடக்கும்போதெல்லாம், தேர்தலுக்கு முன்னுள் இரவில் குடிசைப் பகுதிகளுக்குப் 'போலீசு வேன்' வரும்; அங்குள்ள ஏழைக் குடியைச் சார்ந்த வாலிபர்களைப் பொறுக்கிப் போட்டுக் கொண்டு போய்ச் சிறையில் அடைப்பார்கள்; வீட்டிலுள்ள தாய்மார்களும், குழந்தைகளும் கதறுவர்; எங்கள் வீடுகளுக்கும் கழகச் செயலாளர்கள் வீடுகளுக்கும் வந்து கதறுவார்கள்; நாங்கள் போலீசு நிலையத்திற்கு ஓடோடிச் சென்று கேட்போம்; அங்குள்ள போலீசு அதிகாரிகள், 'தேர்தல் முடியட்டும்; பிறகு பார்ப்போம்' என்பார்கள்! இப்படி, ஏழைகள் அல்லல்பட்டது, காங்கிரசு ஆட்சியில்தான்!

"ஆனால், கழக ஆட்சியின்போது, தென் சென்னை இடைத் தேர்தல் நடைபெற்றது; 'போலீசு வான்' வந்ததா? தாய்மார்கள் கதறக் கதற ஏழை வாலிபர்களைப் பிடித்துக் கொண்டு போனதா?

"காங்கிரசு ஆட்சியில், 'தேர்தல்' என்றாலே குடிசைவாழ் மக்கள் பயந்து கதறினார்களே—வாலிபர்கள் தங்கள் வீட்டுக்கு வராமல் யார் வீட்டுத் திண்ணையிலோ படுத்துறங்கினார்களே—அந்த அளவுக்கு சனநாயக உரிமை தந்த நீங்களா இப்போது சனநாயக உரிமை நாள் கொண்டாடுவது?

"வெளிநாட்டிலிருந்து யாராவது ஒருவர் வருகிறார் என்றால் போதும்—ஊரிலுள்ள பிச்சைக்காரர்களைப் பிடித்து அடைத்து ஒரு நாள் அரசாங்க விருந்து தந்து, அந்த ஒரு நாள் மட்டும் பிச்சை எடுக்காமலிருக்கும் உரிமையைத் தந்த காங்கிரசுக்காரர்களே—நீங்களா சனநாயக உரிமை பற்றிப் பேசுகிறீர்கள்!

"'மக்களுக்குப் பாதுகாப்பு இல்லை; மக்கள் நடமாட முடியவில்லை; உரிமையெல்லாம் பறிபோயிற்று' என்று பேசுகிற காங்கிரசுக்காரர்களைப் பார்த்துக் கேட்கிறேன்—உலகத் தமிழ் மாநாடு நடைபெற்றது; இலட்சோப இலட்சம் மக்கள் கலந்துகொண்டார்கள்; ஒரு நாளல்ல—இரு நாளல்ல— ஏழு நாட்கள் நடைபெற்றது; தமிழகத்தின் பல பகுதிகளிலிருந்தெல்லாம்—சென்னையின் போக்குவரத்து விதிகளை அறியாத கிராமப்புறத்து மக்கள் வந்திருந்தார்கள்; அப்படியிருந்தும், ஒரு சிறு அசம்பாவிதம்கூட நடக்கவில்லை; இதற்குப் பெயரா, பாதுகாப்பு இல்லாத ஆட்சி?

"கும்பகோணத்தில் மகாமகத் திருவிழா நடைபெற்றது; '15 இலட்சம் மக்கள் வந்திருந்தார்கள்' என்று அவர்களே எழுதினார்கள். அத்தனை மக்களும் மகாமகக் குளத்திலிருக்கும் இரண்டு அடித் தண்ணீரில் நின்று செம்பினால் நீரை எடுத்துக் கொட்டிக்கொள்வார்கள்; மைசூர் மகாராஜாவானாலும்—மன்னார்சாமியானாலும் இப்படித்தான் செய்யவேண்டும். அத்தகைய மகாமக விழாவில்—15 இலட்சம் பேர் கலந்துகொண்ட விழாவில் நடைபெற்றது என்ன? நாலே நாலு 'பிக்பாக்கெட்' குற்றங்கள்! 'இந்த மகாமகத்திற்குத் தந்த போலீசுப் பாதுகாப்பு எந்த மகாமகத்துக்கும் தரப்படவில்லை' என்று அந்தப் பகுதி மக்கள் பேசிக் கொள்கிறார்கள்!

"அந்த விழாவிற்காக ரூ. 6-இலட்சம் செலவழித்துப் புதிய சாலைகள் போட்டோம்! நூற்றுக்கணக்கான பஸ்களை விட்டோம்! 'ரிங் ரோடு'கள் எனும் வட்ட வடிவச் சாலைகளை அமைத்து வசதிகள் செய்தோம்!

"'தி. மு. கழகத்தினர் ஆட்சிக்கு வந்தால் கோவிலை இடித்து விடுவார்கள்; குளத்தைத் தூர்த்துவிடுவார்கள்; அவர்கள் நாத்திகர்கள்' என்று காங்கிரசார் செய்த பிரசாரத்திற்கு மாறாக, மகாமகத்திற்கு வந்த இலட்சக்கணக்கானோருக்கு, 'அரசாங்கக் கடமை' என்ற முறையில் வசதிகள் செய்தோம்! 20 இலட்சம் பேர் கூடிய அந்த விழாவில் அசம்பாவிதம் உண்டா? இது, 'சட்டம்--ஒழுங்கு கெட்ட ஆட்சி' என்பதற்கு அடையாளமா?

"மாணவர்களில் ஒரு சிலர், 'தமிழகத்தில் இந்திப் படிப்பு இல்லை' என்று தெரிந்த பின்னரும்கூட, கோவையிலும், சேலத்திலும், மதுரையிலும், 'இந்தி எதிர்ப்பு இயக்கம்' என்ற பெயரால் தமிழக அரசுக்கு எதிராக—இந்திய ஒருமைப்பாட்டுக்கு எதிராக தேசியக் கொடியை எரித்து, தனித் தமிழ் நாடு கொடியை ஏற்றினார்கள். அந்தச் செயலை வன்மையாகக் கண்டிக்கிறோம்; அதற்கான நடவடிக்கைகளை இந்த அரசு மேற்கொண்டிருக்கிறது.

"ஆனால், இந்த நேரத்திலும் காங்கிரசிலுள்ள ஒரு சிலர் இந்தச் செயல்களைத் தூண்டிவிடும் தோரணையில் எழுதியும் பேசியும் வருகிறார்கள்; 'எங்கே ஒழிந்தது இந்தி; மாணவர்களே ஏமாறாதீர்கள்' என்று சி. சுப்பிரமணியம் போன்றவர்களேகூடச் சமீபத்தில் பேசியிருக்கிறார்கள் என்றால், அவர்கள் எண்ணமெல்லாம், 'தமிழக அரசுக்கு ஒரு நெருக்கடி ஏற்பட வேண்டும்; அதில் தாங்கள் குளிர் காயவேண்டும்' என்பதுதான்!

"அதனால்தான் தேசியக் கொடியை அந்த விஷமிகள் எரிப்பதைப் பார்த்தும்கூடப் பதைக்காமல், அவர்களை மேலும் தூண்டிவிடும் தோரணையில், 'சனநாயக உரிமை நாள்' என்ற பெயரால் ஒரு சில இடங்களில் ஒரு சில காங்கிரசார் பேசுகிறார்கள்! இது, 'மகன் செத்தாலும் பரவாயில்லை; மருமகள் தாலி இழந்தால் போதும்' என்கின்ற மாமியாரின் நினைப்பாகத்தான் இருக்கிறது!

"இந்தப் போக்கு எதைக் காட்டுகிறது? 'மகுடம் போயிற்றே; மந்திரிப் பதவி போயிற்றே; மண்டலத்தை ஆண்டது போயிற்றே' என்ற எரிச்சலில்—'போனது போனதுதான்; இனி வராது' என்ற நினைப்புடன் காங்கிரசுக்காரர்கள் ஆத்திரப்படுகிறார்கள்!

"ஆனால் நாமோ, 'மக்களால் வந்தது இந்தப் பதவி; வந்தது இடையில் போனாலும் மீண்டும் அது நமக்கே வரும்' என்ற நம்பிக்கையில் பணிபுரிந்து வருகிறோம்! இனியும் அதே நம்பிக்கையில் பணிபுரிவோம்—வெல்வோம்!"

—பொதுப் பணித்துறை அமைச்சர்

மு. கருணாநிதி

(சென்னை 91-வது வட்டம் திருவள்ளுவர் மன்றச் சார்பில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில்)

சைப்ரஸ் தலைவர் பதவி

மகாரியஸ் பாதிரியாரே தேர்வு

அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு சைப்ரஸ் குடியரசுத் தலைவராக மகாரியஸ் பாதிரியார் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்,

தலைவர் பதவிக்குப் போட்டியிட்ட மகாரியஸ் பாதிரியாருக்கு 90 சதவிகித வாக்குகளும், அவரை எதிர்த்துப் போட்டியிட்ட டாக்டர் டாக்கிசுக்கு 5 சதவிகித வாக்குகளும் கிடைத்தன.

ஸ்டான்லி மருத்துவக் கல்லூரியில் பொங்கல் விழா

சென்னை ஸ்டான்லி மருத்துவக் கல்லூரித் தமிழ் மன்றச் சார்பில் 29—2—68 மாலை 4-மணிக்கு பொங்கல் விழாக் கொண்டாடப்படும்; உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மா. முத்துசாமி தலைமை வகிப்பார்; பொதுப் பணித்துறை அமைச்சர் திரு. மு. கருணாநிதி சொற்பொழிவாற்றுவார்.